*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **06 அக்டோபர் 2025**

**<u>பத்திரிகை செய்தி</u>**

புதுச்சேரி மாநிலத்தில், சென்டாக் மூலம் மருத்துவப் படிப்பில் சேர அரசு பள்ளி மாணவர்களுக்கு 10 % இட ஒதுக்கீடு வழங்க அனுமதி அளித்த துணைநிலை ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, அரசு பள்ளிகளில் பயின்ற மருத்துவ மாணவர்கள் இன்று(06.10.2025) துணைநிலை ஆளுநரை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர்.

நிகழ்ச்சியின் போது,

ஏழை- எளிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்களின் மருத்துவ கல்விக்கு உதவும் விதமாக, நியமன சட்டமன்ற உறுப்பினர் திரு செல்வம், மற்றும் புதுச்சேரி சென்டாக் மாணவர்- பெற்றோர் நலச் சங்கத்தின் தலைவர் திரு நாராயணசாமி ஆகியோரின் முயற்சியில் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், சீருடை, மருத்துவ உபகரணங்கள் மற்றும் நிதி உதவி வழங்கப்பட்டது.

மாணவர்களுக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி வாழ்த்திய துணைநிலை ஆளுநர், "மாணவர்கள் நல்ல முறையில் படித்து புதுச்சேரி அரசுக்கும் மாநிலத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்."

நியமன சட்டமன்ற உறுப்பினர் திரு செல்வம் மற்றும் திரு நாராயணசாமி உடன் இருந்தனர்.